சமூக நல ஆணையரக நிருவாக அலுவலர் (பொ), சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

**முன்னிலை: திருமதி.ஹ.சபியா, M.A.,**

செ.மு.மூ.மு.எண் 19993/நிரு.4(1)/2019 நாள்:-16.07.2019

பொருள்:– பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சைதாப்பேட்டை, சென்னை 15 – செல்வி.ம.கஸ்தூரி, தட்டச்சர், மாவட்ட சமூக நல அலுவலகம், தருமபுரி மாவட்டம் என்பவருக்கு தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை பூர்த்தி செய்து ஆணை வழங்குவது – சார்பு.

பார்வை:–
1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.5893/PSD-F2/2017 நாள்:-03.10.2017.
2. சமூக நல இயக்குநர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.எண் 30216/நிர்4(3)/2017 நாள்:-30.10.2017.
3.மாவட்ட சமூக நல அலுவலர் (பொ), தருமபுரி மாவட்டம் அவர்களின் ந.க.எண்.1772/அ1/2017 நாள்:-26.06.2019.

........

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தருமபுரி மாவட்டம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் செல்வி.ம.கஸ்தூரி என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 28 (1)ன்படி தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 03.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2015–2016க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் நீதிப்பேராணைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

செல்வி.ம.கஸ்தூரி, தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடலாகிறது.

இணைப்பு:- பணிப்பதிவேடு.

ஒம்/–ஹ.சபியா
நிருவாக அலுவலர் (பொ)

பெறுநர்
செல்வி.ம.கஸ்தூரி,
தட்டச்சர்,
மாவட்ட சமூக நல அலுவலகம்,
தருமபுரி மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)

நகல்

1. மாவட்ட சமூக நல அலுவலர், தருமபுரி மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
2. இருப்பு கோப்பு / உதிரி.

Attested

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர்.

மாவட்ட சமூகநல அலுவலர்
தருமபுரி

26 JUL 2019